REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 249

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 19உ வியாழன் (1—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 20உ வெள்ளி (2—4—54)

'ஆட்சிப் பொறுப்பில் இருந்த நாங்கள் திருடர்கள் போல் துரத்தப்பட்டோம்!'

—(:)—

'எங்கள் இணைப்புக் கோரிக்கை நியாயமானது; மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பது'

'பிரெஞ்சு வரலாற்றில் வெட்கப்படுதற்குரிய கட்டமே பிரெஞ்சிந்திய சர்க்கார் போக்கு!'

பிரெஞ்சு இன்ஸ்பெக்டர்-ஜெனராலுக்கு குபேர் குழுவினர் பகிரங்கக் கடிதம்

பிரெஞ்சிந்திய மந்திரிகளான குபேர், முத்துக் குமாரப்ப ரெட்டியார் ஆகியவர்களும், புதுச்சேரி மேயர் டி. முத்துப் பிள்ளையும், பிரெஞ்சு சர்க்கார் காலனி இலாகாவைச் சேர்ந்த வெளிநாட்டுப் பிரதேச இன்ஸ்பெக்டர் ஜெனரல் மான்செலுக்கு விடுத்துள்ள பகிரங்கக் கடிதத்தின் விபரம் கீழே தரப்படுகிறது:—

"நாட்டின் மந்திரிகளுக்குள்ள அந்தஸ்து, அதிகாரம், உரிமைகள் முதலியவைகளை நிச்சயமாய் உத்தரவாதம் செய்து நீங்கள் ஏற்படுத்திய பிரெஞ்சிந்திய ஆட்சிக் கௌன்சிலின் அங்கத்தினர்களான நானும், எனது சகாக்களும், இப்போது பிரெஞ்சு செட்டில்மெண்ட் பிரதேசங்களிலிருந்து தப்பி வந்துள்ள அரசியல் அகதிகளாக, சாதாரணத் திருடர்களைப்போல் துரத்தப்பட்டு வந்திருக்கிறோம்.

இரண்டாவதாக, நீங்கள் ஒரு அர்த்தமில்லாத, கூடமான காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறீர்கள்; தகவல் தெரிவது என்பது இனிமேல் உங்கள் உண்மையான நோக்கமாக இருக்க முடியாது; ஏனென்றால், ஏற்கனவே உங்கள் சர்க்காருக்கு நன்றாய் மனதில் பதியும்படி தெரிய வைத்துள்ள விஷயங்கள் போதாதா; இன்னும் அவர்களுக்கு வேறென்ன தகவல் வேண்டியிருக்கிறது?

இன்று பிரெஞ்சிந்தியப் பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் பிரான்சின் சரித்திரத்தில் மிகவும் வெட்கப்படுதற்குரிய கட்டமாக அமைந்துவிட வில்லையா? இம்மாதிரியாக நாஜி நடைமுறைகள் எங்கள் மீது திணிக்கப்படுவதைக் கண்டு, தங்கள் பரம்பரை மரபில் உண்மையான பற்றுதல் உள்ள பிரெஞ்சு மக்கள் வெட்கப்பட வேண்டும்; அவர்கள் இத்தகைய நாஜிச நடைமுறைகளுக்கு உட்பட்டிருந்த சமயத்தில் அவமானத்தாலும் உணர்ச்சிக் கொதிப்பாலும் அவர்கள் துடித்ததை இப்போது நினைத்துப் பார்க்கவேண்டும்.

தகவல் தெரிய வந்திருக்கும் அன்பரே! சமீப கால பிரெஞ்சிந்தியச் சரித்திர நிகழ்ச்சிகளில் மிகவும் பிரம்மாண்டமான நிகழ்ச்சியைச் சற்றுச் சிந்தித்துப் பாரும். அது இதுதான்; பிரெஞ்சிந்தியக் கௌன்சிலின் அங்கத்தினர்களும், கம்யூன்களின் மேயர்களுமாகிய நாங்கள், இந்தக் குடியேற்றப் பிரதேசத்திலுள்ள மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை உணர்ந்து, அதை நாங்களும் பிரதிபலிக்கும் முறையில, இந்தப் பிரதேசங்களை இந்திய யூனியனுக்கு உடனடியாக மாற்றிவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி பாரிசிலுள்ள உங்கள் சர்க்காரைக் கேட்டுக்கொண்டோம். அது மிகவும் நியாயமான ஒரு கோரிக்கை. அது சகலருடைய ஆதரவையும் பெற்றிருக்கிறது. அது விவாதிக்கப்பட்டபோது கமிஷனர் அதை விசுவாசத்துடன் பாரிசுக்குத் தெரிவிப்பதாக உறுதி கூறியிருந்தார். ஆனால், சட்டமும், அமைதியும் பாதுகாக்கப்படும் என்று எங்களிடமிருந்து ஒரு வாக்குறுதியைப் பெறுவதில ஆர்வம் காட்டிய கமிஷனர், தானே அதற்குப் புறம்பாகச் சென்று மிகவும் அட்டகாசமாகச் சட்டத்தையும் அமைதியையும் குலைத்திருக்கிறார்.

சட்டபூர்வமாயும் அரசியல் விதிகளை அனுசரித்த முறையிலும் நாங்கள் விடுத்த கோரிக்கைக்கே இந்த கதியென்றால், பொதுஜன வாக்கெடுப்பு ஒன்று நடந்தாலுமே யானால் பிரெஞ்சு அதிகாரிகளின் கட்டுத் திட்டமான பலாத்காரம் எந்த அளவுக்குச் செல்லும் என்பதைச் சொல்லவா வேண்டும்? பிரெஞ்சிந்தியக் குடி மக்களின் நியாயமான இந்த அச்சத்தை உங்கள் அறிக்கையில் மற்றொரு முக்கியத் தகவலாகக் குறித்துக் கொள்ளுங்கள். நீங்கள் கௌரவ மிக்க ஒரு அங்கத்தினராகப் பதவி வகிக்கும் உங்கள் சர்க்காருக்கு மற்றொரு விஷயத்தையும் தயவு செய்து தெரிவியுங்கள்; எங்கள் இயற்கையான, தேசபக்தி மிக்க இந்தக் கோரிக்கையை நல்ல சர்க்கார் வரவேற்றிருக்கும் தோரணையானது, அதிகார வர்க்கத்தின் பலாத்காரம் மீண்டும் தலைவிரித்தாடாதபடி பொதுஜன வாக்கெடுப்பு எதுவுமே நடைபெற முடியாது என்பதை நிரூபிப்பதற்கு நிச்சயமான அத்தாட்சி என்பதையும் உங்கள் சர்க்கா

(4-ம் பக்கம் பார்க்க)

★

ஏகாதிபத்தியப் பிடியை 20 கிராமத்தார்கள் உதறித் தள்ளினர்

17,000 பிரெஞ்சிந்தியக் குடிகளின் விடுதலை முழக்கம்

ஆதிக்கக்காரர் பெற்றெடுத்த 'ஜனநாயகக் கட்சி'

புதுச்சேரி, மார்ச் 31—

புதுச்சேரிக்குத் தென் மேற்கில் சுமார் 12 மைல் தூரத்திலுள்ள நெட்டப்பாக்கம் கம்யூனில், இரு கிராமங்களை பிரெஞ்சிந்திய சோஷலிஸ்ட் தலைவர்கள் வசப்படுத்திக் கொண்டு, பிரெஞ்சிந்திய ஆட்சியை மறுத்து சுதந்திரப் பிரகடனம் செய்தனர். 20 கிராமங்களைக் கொண்ட இந்த கம்யூன் மக்கள் தொகை 17,000 ஆகும்.

நெட்டப்பாக்கம் கிராமத்தில் அவர்கள் பிரவேசித்து போலீஸ் நிலையங்களையும், மேயர் அலுவலகங்களையும் வசப்படுத்திக்கொண்டு பிரெஞ்சுக் கொடிகளை இறக்கி, இந்தியக் கொடிகளைப் பறக்க விட்டனர்.

போலீஸ் நிலையத்தில் இருந்த போலீஸ்காரர்கள் தங்களுடைய ஆயுதங்களை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, மக்களோடு சேர்ந்து மகிழ்ச்சியுடன் 'வாழ்க' என்று முழக்கமிட்டனர். மேயர் அலுவலகச் சிப்பந்திகளும் வெகு உற்சாகத்துடன் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.

நெட்டப்பாக்கம் கம்யூன், புதுச்சேரியிலிருந்து காரை பக்கத்திலும் தொடர்பற்ற ஒரு திட்டு பகுதியாகும். அங்குள்ள மதிக்கரை கிராமத்திலும் போலீஸ் நிலையத்தை தலைவர்கள் வசப்படுத்திக் கொண்டு இந்தியக் கொடியைப் பறக்கவிட்டதாகத் தெரிகிறது.

மேனன் முயற்சி

இதற்கிடையில் பிரெஞ்சிந்திய கவர்னர் மேனன் ஒரு இடைக்கால சர்க்காரை அமைக்க முயற்சித்து வருவதாகத் தெரிகிறது. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் "ஜனநாயகக் கட்சி"யைக் கொண்டு அச்சர்க்கார் தோற்றுவிக்கப்படுமாம். ஒரு முன்னாள் மாஜிஸ்திரேட்டான அதம்பி என்பவர்தான் அக்கட்சிக்குத் தலைமை வகிக்கிறார்.

ஊர்வலங்களுக்குத் தடை விதித்திருந்தும் சுமார் 30 பேர் கொண்ட கூட்டத்தினர் இணைப்பு எதிர்ப்பு சுலோகங்களை முழக்கிக் கொண்டு சென்றனர். இவர்களுக்கு காவலாக போலீசார் கூடவே சென்றனர். இதை கவர்னரும், இன்ஸ்பெக்டர்—ஜெனரலும் மாடியிலிருந்து பார்த்துக் களித்துக் கொண்டிருந்தனராம்.

ஒரு இந்திய கிராமத்தில்

★

மந்திரிகள் டிஸ்மிஸ்!

புதுச்சேரி மேயரும் விலக்கப்பட்டார்

பிரெஞ்சு அரசாங்க தர்பார்!

புதுச்சேரி, மார்ச் 31—

பிரெஞ்சிந்தியா சர்க்கார் மந்திரிகள் பதவியிலிருந்து குபேரையும், முத்துகுமாரப்ப ரெட்டியும் 'டிஸ்மிஸ்' செய்துவிட்டதாக பிரெஞ்சிந்திய சர்க்கார் அறிவித்தது.

புதுச்சேரி மேயர் பதவியிலிருந்த கே. முத்து பிள்ளையையும், துணை மேயர் பதவியிலிருந்த குபேரையும் அரசாங்கம் நீக்கியது.

★

இந்தியத் தூதுவர் அலுவலகத்தின் முன் வேவு வேலை!

இங்குள்ள இந்தியத் தூதுவராலயத்தின் முன் பிரெஞ்சுப் போலீசார் காவல் புரிய நிறுத்தப்பட்டிருக்கின்றனர்; அவர்கள் போலீஸ் உடையிலும், சாதாரண உடையிலும் நின்றுகொண்டு இந்தியத் தூதுவராலயத்திற்கு வருவோர் போவோர் எல்லோரையும் விசாரித்துக் கொண்டும், கண்காணித்துக்கொண்டுமிருக்கின்றனர்.

பிரெஞ்சுப் போலீஸ் அதிகாரி ஒருவர், இந்தியத் தூதுவராலயத்திற்கு வருகிற எல்லோரையுமே 'ஏன் வந்தாய்? என்ன பேசினாய்?' என்றெல்லாம் கேள்விகள் கேட்கிறாராம்.

அங்கு தூதுவராயுள்ள கேவல் சிங் என்பவர் இதை கவனமாக நோக்குவதோடு, இதுபற்றி இந்திய அரசினுடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

இராணுவ டிப்போவில் திருட்டு சம்பந்தமாக தேடப்பட்டு வந்த 'கொள்ளைக்காரன்' தான் இந்த இணைப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவன் என்று சொல்லப்படுகிறது.

முன்னாள் மந்திரி லட்சண்ணாவைத் தாக்க முயற்சி

முன்னரும் மூன்று பொதுவுடமையினரும் தாக்கப்பட்டுள்ளனர்

கர்நூல், மார்ச் 31—

நந்தியால் என்னும் ஊரில், பிரகாசம் மந்திரி சபையில் மந்திரியாக இருந்தவரும், கிசிஷிக்லோக் கட்சியின் முக்கியஸ்தருமான ஜி. லட்சண்ணா அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றில் பேச முன் வந்தார். எதிர்ப்பாளர் கூட்டம் ஒன்று அவரைப் பேசவிடாமல் தடுத்ததோடு, சூழ்ந்துகொண்டு அவரைத் தாக்கவும் முனைந்தது.

அவர் பேசவிருந்த கூட்டத்தில், அவருக்கு முன்பாகப் பேசிய ஒருவர், அப்பகுதியில் 'காலித்தனம்' உச்சத்தில் இருக்கிறது எனக் கூறினாராகவும், அதைக் கேட்ட, ஆத்திரமடைந்தவர்களே, முன்னாள் மந்திரியைத் தடுத்துவிட்டார்கள் எனவும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 1—4—54 வியாழன்

இந்தி வெறியர் இருவர்!

இந்தியத் துணைக்கண்ட பாராளுமன்றத்தில் கல்வி மானிய கோரிக்கையின்மீது விவாதம் நடந்திருக்கிறது அதுகாலே, இந்தி மொழி வெறிக்குப் பேர்போன உத்திர பிரதேச இந்தி வெறியர்களான புருஷோத்தமதாஸ் தாண்டனும், சேட் கோவிந்ததாசும், தங்களுக்கு இந்தி மொழியின் மீதுள்ள கட்டு மீறிய வெறியைக் காட்டிக் கொண்டதோடு மட்டுமல்லாமல், பிற மொழிகள்மீது உள்ள மட்டற்ற அழுக்காறையும் பறை சாற்றிக் கொண்டுள்ளனர்.

மொழிவெறிக்கு மட்டுமே அவர்கள் பலியாகி இருக்கின்றனர் என்று சொல்வதற்கில்லை. இந்துமத வெறியின் பிடியிலும் அவர்கள் சிக்கி, நல்லறிவிழந்து கிடக்கின்றனர். அவர்களைக் குறித்து இதுவரை தெரிந்து கொண்டில்லாதவர்களும் விளக்கமாகத் தெரிந்துகொள்ளும் வகையில், அவர்கள் அன்றைய விவாதத்தில், மேற்குறித்த இரு உண்மைகளையும் விளக்கிவிட்டிருக்கிறார்கள்.

இந்தி மொழி நீங்கலாக, மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு யூனியன் சர்க்கார் செய்திருக்கிற சிறு சிறு உதவியும், அந்த இரு வெறியர்களின் கருத்துக்கு எட்டியாக இருக்கிறது. இந்தி மொழி ஒன்று மட்டுமே, இந்தியத் துணைக் கண்டத்தின் தனி மொழியாக இருக்கவில்லை. ஒரு மொழிக்கு இருந்து தீரவேண்டிய வளம் பலவும் இந்திக்கு அறவே இல்லவும் இல்லை.

இந்தியத் துணைக் கண்டத்தில், இந்தியைக் காட்டிலும் வளமிக்க மொழிகள் பல உள்ளன என்பதை இந்த வெறியர்கள் அறிந்திருக்க முடியாது; அறிந்து கொள்ளுவதும் அவர்கள் புன்லறிவிற்கு இயலவும் இயலாது.

அரசியல் தனிச் சிறப்பும் பெறுவதற்கு இந்தியைவிட, எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் மொழி சில உண்டு என்பதை இந்திய மொழி வரலாறு எடுத்துக் காட்டிக் கொண்டு இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்து மக்களில் பெரும் பகுதியினர் இந்தி பேசி வருகின்றனர் எனப் பொய்க் கணக்கு எழுதி, இந்திக்கு ஏற்றம் தேடி இருப்பதை உண்மையானதென்றே ஒப்புக்கொண்டு பார்த்தாலும், இந்தி மொழி பேசும் மக்கள் மட்டுமே, யூனியன் சர்க்காரின் வருமானத்தைப் பெருக்குகிறார்கள் என்ற நிலை இல்லை. மற்ற மொழியினர் அனைவரும் செலுத்தும் வரியினாலுந்தான், மத்திய சர்க்காரின் நிதி வளர்ந்திருக்க முடிகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, வரி செலுத்துகிற ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் மொழியின் முன்னேற்றத்திற்கு உதவி செய்யுமாறு, யூனியன் சர்க்காரைக் கோர உரிமை இருக்கிறது. அக்கோரிக்கையைத் தட்டிக் கழிக்காமல், அனைத்து மொழியின் ஆக்கத்திற்கும் பண உதவி புரிய யூனியன் சர்க்கார் கடமைப்பட்டு இருக்கிறது. இந்தச் சாதாரண நியாயத்தைக் கூட, அந்த இரு மொழி மத வெறியர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பது பரிதாபத்திற்குரியதேயாகும்.

உருது மொழியினை வளர்த்துவரும் சிபிலி கழகத்திற்கு ரூ. 60,000 மானியமாக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது. இந்த உதவித் தொகையைக்கூட, யூனியன் சர்க்கார் கல்வி அமைச்சரான அபுல்கலாம் ஆசாத் அவர்கள் தம்பிச்சையாக கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. கழகத்தின் செல்வ நிலை சீர்கெட்டுப்போய், இனி கழகம் இயங்காது என்ற நிலை பிறந்துவிட்ட பிறகு, கழகத்தின் பொறுப்பாளர்கள் பண்டிதரை அணுகி, நிலைமையை விளக்கிக் கூறி, உதவி கோரியுள்ளனர். பிரதமர் தலையிட்டு, யூனியன் சர்க்காரை வலியுறுத்தினதின் மேல், உருது மொழி ஆக்கக் கழகத்திற்குப் பணம் கொடுத்திருக்கிறது யூனியன் சர்க்கார். இவ்வளவு முயற்சிக்குப் பிறகு கிடைத்துள்ள சிறு உதவியும், இந்த வெறியரான தாண்டனுக்குக் கோபத்தைக் கொடுப்பதாக இருக்கிறது!

தமிழ் கலைக் களஞ்சியத்திற்கும், யூனியன் சர்க்கார் 80,000 ரூபாய் உதவி செய்துள்ளது. இதுவும் கடுப்பைக் கொடுத்திருக்கிறது புருஷோத்தமனுக்கு.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக இருக்கும் வாய்ப்பை இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்ட போதிலும், மற்ற மாநிலங்களில், அந்தந்த மாநில மொழிகளே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதையும் அதே அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டு இருக்கிறது. இந்த உண்மை இந்தி வெறியருக்குத் தெரியாது என்று சொல்லி விடுவதற்கில்லை. தெரிந்திருந்தும்கூட பிற மொழி வளர்ச்சியைக் குலைக்கத் தாண்டன் போன்றோர் முன்வருகிறார்கள் என்றால் அவர்கள் தங்களையும் அறியாமல் இந்தி வளர்ச்சிக்கு ஊறு தேடுகிறவர்களாகிறார்கள் என ஆசாத் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மையேயாகும். எந்த வகையிலும் தகுதியற்ற நூல்களுக்கு, சந்தர்ப்ப சௌகரியத்தால், புதிய தகுதி ஏற்பட்டு விடுமானால், அத்தகுதி நீண்ட நாள் நிலைத்து நிற்காது என்பதும், அதன் ஆதரவாளர்களே, அந்த தகுதியைக் குலைக்கத் தங்களையும் அறியாமல் வழி தேடி விடுவார்கள் என்பதும் இயற்கை நியதியாகும்.

சேத் கோவிந்ததாஸ் என்பவர், ஆங்கில மொழி பற்றுடையவர்களை எல்லாம் 'மெகாலே' எனும் வெள்ளையனின் சந்ததியினர் என பாராளுமன்றத்தில் வாய்க்கொழுப்பாகப் பிதற்றி இருக்கிறார். அவரை மேலும் பேசவிடாமல் தடுத்து, மற்ற உறுப்பினர்கள் 'வெட்கம்! வெட்கம்!' எனக் கூச்சலிட்டு உட்கார வைத்துவிட்டு இருக்கிறார்கள். பேச முடியாமல் உட்கார்ந்திருக்கிறாரே அல்லாது, அவர் தம் சுயமைத்தனத்தை மாற்றிக் கொண்டிருப்பார் என நம்புவதற்கிடமில்லை.

பாகிஸ்தான் கிடைத்ததை சுட்டிக்காட்டி, தாண்டன் போன்றோரின் கமுக்கு உள்ளமும் பாகிஸ்தான் அமைவதற்கு பெருதவியாக இருந்தது என கல்வி அமைச்சர் எடுத்துக் காட்டியுள்ளார். தாண்டனின் இந்தி மொழி வெறி, திராவிட நாடு பிரிவினைக்கும் வழிகோலுகிறது என்பதை நாம் நினைக்கும்பொழுது, உண்மையிலேயே, தாண்டனின் இந்தி வெறி மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென்றே நாம் ஆசைப்படுகிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாமற்போனாலும தாண்டனின் வெறி தணியப்போவதுமில்லை, திராவிட நாடு பிரியாமல் இருக்கப்போவதுமில்லை. வாழ்க; இந்தி வெறியர் இருவர்!

சமுதாய அபிவிருத்தி சேவை திட்டம்

3,000 கிராம ஊழியர்கள் பணி புரியத் தயாராம்!

புதுடில்லி, மார்ச் 29—

முதல் ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில் தேசிய விஸ்தரிப்பு வேலைகளுக்காக வேண்டியிருக்கும் 12,000 கிராம ஊழியர்களில் சுமார் 3,000 பேர் இதுவரை பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்; மேலும் சுமார் 1,500 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி பெற்றுள்ள கிராம ஊழியர்கள் தேசிய விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக, மொத்தம் 34 லட்சத்துக்கு அதிகமாக மக்கள் தொகை கொண்டுள்ள 43,000 கிராமங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

முதல் ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில் தேசிய விஸ்தரிப்பு வேலைகளுக்காக மொத்தம் 83,834 சிப்பந்திகள்—அதாவது, திட்ட நிர்வாக அதிகாரிகள், குமாஸ்தாக்கள், விவசாய பட்டதாரிகள், கிராம ஊழியர்கள், சமூகக் கல்வி அமைப்பாளர்கள், உபாத்தியாயர்கள், சுகாதார சிப்பந்திகள், எஞ்சினியர்கள், ஓவர்சியர்கள் முதலியவர்கள் உட்பட — தேவையாயிருப்பார்கள் என்று தெரிகிறது. இவர்களில் பெரும்பாலோருக்கு, திட்டப் பிரதேசங்களில் அவர்களை வேலையில் அமர்த்துவதற்கு முன்னால் பயிற்சியளித்தாக வேண்டியிருக்கிறது.

கிராம ஊழியர்கள், சமூகக் கல்வி அமைப்பாளர்கள், சுகாதார சிப்பந்திகள், தொகுதி அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோருக்கான பயிற்சி வகுப்புகள் ஏற்கனவே துவக்கி வைக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

சர்வதேச நிதி நிலையம்

இந்தியாவின் வட்டித் தொகை

புதுடில்லி, மார்ச் 30—

"சர்வதேச நிதி நிலையத்திலிருந்து டாலர்கள் வாங்கிய வகையில், 1952-53ம் ஆண்டில், அந்த நிலையத்திற்கு இந்திய சர்க்கார் 15,16,029 டாலர்கள் (ரூ. 72,31,740) வட்டியாகக் கொடுத்திருக்கின்றனர்," என்று நிதி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

டவுன் டிக்கெட்டுகள்—சர்க்கார் முடிவு

சென்னை, மார்ச் 30—

இனிமேல், சர்க்கார் அச்சகத்திலேயே பஸ் டிக்கெட்டுகளை அச்சிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இதற்கான செலவுகளை சர்க்கார் அனுமதித்துவிட்டனரென்றும், இதற்காக 3 இயந்திரங்கள், அச்சகத்தில், தனியாக ஒதுக்கப்பட்டுள்ளனவென்றும் தெரிகிறது.

திருவாங்கூர் காங்கிரஸ் சட்டசபை கட்சிக்கு ஏ. சிதம்பரநாத நாடார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பழைய மந்திரி சபையில் அங்கம் பெற்றிருந்தார்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்திற்கு உதவியதற்கு இந்தி வெறியர் சீற்றம்

இம்மனப்பான்கு இந்தியை அழிக்குமென ஆசாத் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 30—

"தமிழ்க் கலைக் களஞ்சியத்திற்கு 1949-ல் உதவி கோரப்பட்டது; இதற்கு ரூ. 80,000 மானியம் கொடுக்க சர்க்கார் தீர்மானித்தனர்; ஆனால், இதை எதிர்த்துப் பெருங்கூச்சல் கிளப்பப்பட்டது; 'இந்தி மொழிக்குச் சம்பந்தமில்லாத ஒரு விஷயத்திற்கு ஏன் உதவி அளிக்க வேண்டும்?' என்ற மனப்பான்மைதான் இதற்குக் காரணம்; இந்தியின் வளர்ச்சியை இந்த மனோபாவம்தான் தடை செய்கிறது."

இவ்வாறு மக்கள் சபையில் கல்வி மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மௌலானா அபுல் கலாம் ஆசாத் கூறினார்.

ரஷ்யாவிடமிருந்து அமெரிக்காவுக்குக் கப்பல்கள்

பழைய கடனில் ஒரு பகுதி மீண்டது

வாஷிங்டன், மார்ச் 31—

இரண்டாவது உலக யுத்தத்தில் இரவல்-குத்தகை ஒப்பந்தப்படி ரஷ்யாவுக்கு அமெரிக்கா 186 கடற் படைக் கப்பல்களை அளித்திருந்தது. 1948 செப்டம்பர் 3-ந் தேதி இவைகளைத் திருப்பித் தரவேண்டுமென்று அமெரிக்கா ரஷ்யாவைக் கேட்டது. அவைகளில் 38 சிறிய கப்பல்களை அருகிலுள்ள இஸ்டான்புல் என்ற இடத்தில் இந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் திருப்பித் தருவதாக ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது. மற்று முள்ள 148 கப்பல்களைத் திருப்பி அளிக்கும் தேதிகளைப் பற்றி விவாதம் நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இவைகள் தற்பொழுது ஜார்கிழக்கு, வட ஐரோப்பா பிரதேசங்களில் இருக்கின்றன.

அமெரிக்காவுக்கு ரஷ்யாவிடமிருந்து வரவேண்டிய 1,100 கோடி டாலர் யுத்தக் கணக்கில் இவையும் சேர்ந்தவையாகும்.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை

53,307 பேர் எழுதினர்

சென்னை, மார்ச் 30—

சென்னை மாநிலத்தில் இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்விற்கு 500 செண்டர்களில் 53,307 பேர்கள் எழுதியுள்ளனர். சென்ற ஆண்டு நடந்த எஸ். எஸ். எல். சி. தேர்வில் எழுதியவர்கள் ஆந்திர மாநிலம் உட்பட 87,000 பேர்கள்.

தமிழ்க் கருவூலம்

தமிழ்ப் புத்தாண்டு பிறப்பன்று முதல் தொகுதி வெளிவரும்

சென்னை, மார்ச் 30—

தமிழ் கருவூலத்தின் (என்சைக்ளோபீடியா)வின் முதல் தொகுதி தமிழ் ஆண்டு பிறப்பன்று தமிழ் வளர்ச்சி கழகத்தினால் வெளியிடப்பட விருக்கிறது. முதல் தொகுதியில் 750 பக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. 25 ஆகும்.

வேலையில்லாத் திண்டாட்டம்

5,22,360 பேர் மனு

சென்னை, மார்ச் 30—

இந்தியாவில் 1953 செப்டம்பரில் வேலை தேடித் தரும் நிலையங்களின் பட்டியலிலுள்ளவர்கள் எண்ணிக்கை 5,12,353 பேர்; இவர்களில் 1,25,790 பேர் மெட்ரிகுலேட்டுகள்; 16,884 பேர் இண்டர்மீடியேட்டுகள்; 19,629 பேர் பி. ஏ., பட்டதாரிகள்.

1953 டிசம்பரில் 5,22,360 பேர் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். வேலை இழந்த 8,100 சர்க்கார் சிப்பந்திகளுக்கு வேலை தேடித்தரப்பட்டுள்ளது. இவர்களில் 4,137 பேர் மத்திய சர்க்கார் சிப்பந்திகள்; 3,963 பேர் மாநில சர்க்கார் சிப்பந்திகள்.

இந்தியாவில் 126 வேலை தேடித் தரும் நிலையங்கள் வேலை செய்கின்றன.

ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசன திட்டங்கள்

நிதி மந்திரி தகவல்

சென்னை, மார்ச் 30—

சென்னை மாநிலத்தில் திருத்தியமைக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் பாசன, விசைத் திட்டங்கள் குறித்து சட்டசபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் அறிவித்ததாவது:—

பாசன திட்டங்கள் — 1956 இறுதிவரை மதிப்பிடப்பட்டிருக்கும் செலவுத் தொகை விவரம் வருமாறு:—

அமராவதி திட்டம்—149 லட்சம் ரூபாய்; வைகைத் திட்டம்—சுமார் 138 லட்சம் ரூபாய்; கிருஷ்ணகிரி திட்டம்—ஐம்பது லட்சம் ரூபாய்; சாத்தனூர் திட்டம்—75 லட்சம் ரூபாய்.

விசைத் திட்டங்களும், செலவு மதிப்பீடு விவரமும் வருமாறு:—

பெரியாறு நீர் மின்சாரத் திட்டம்—135 லட்சம் ரூபாய்; குண்டா மின்சாரத் திட்டம்—ஐம்பது லட்சம் ரூபாய்.

குண்டா நீர் மின்சார திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள திட்டக் கமிஷனின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது.

சூரிய உஷ்ண அடுப்புகள் உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 29—

சூரிய உஷ்ணத்தைக் கொண்டு அடுப்புக்களைத் தயாரிப்பதற்கான உரிமையைப் பம்பாயிலுள்ள ஒரு கம்பெனிக்கும், கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்கும் இயற்கை வள, விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரிலாயம் விற்றுவிட்டதாகவும், 1953-ல் 264 அடுப்புகள் உற்பத்தியாயின வென்றும், 227 விற்பனையாயின வென்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

கழகச் செய்திகள்

அக்கிப்பேட்டையில் தி.மு.க. பொதுக்கூட்டம்

பெங்களூர், மார்ச் 29—

28—3—54 ஞாயிறு மாலை 6 மணியளவில், சிக்கலால் பார்க்கில் தி.மு. கழகச் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் வே. இளஞ்சேரன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியத்தை விளக்கிக் கூறினார். தன்னர் இ. சோழன், சி. உலகநாதன் ஆகியோர் சிறிது நேரம் பேசிய பின், தோழர் மு சி வேணு அவர்கள், தி மு கழகத்தின் இலட்சியம், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சுரண்டல், ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவைகளைப் பற்றி விரிவுரையாற்றினார்.

மாரண்டஅள்ளியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

மாரண்டஅள்ளி, மார்ச் 29—

25—3—54ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் எம். என். அங்கமுத்து, தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். என். பசவராசன், என். எ. பாஷா, மா. மு. ரங்கநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முட்டாஞ்சட்டியில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

24—3—54ல், எருமப்பட்டி தி. மு. கழகச் சார்பில், முட்டாஞ்சட்டியில், தோழர் பி. ராமசாமி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சேலம் சித்தலி சுப்ரமணியம் அவர்கள் மும்முனை போராட்டங்களை விளக்கிப்பேசினார்.

ஆலத்தம்பாடி தி. மு. க. அமைப்புக் கூட்டம்

28—3—54 இரவு 10 மணிக்குத் தோழர் இரா. இலட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர்: இரா. இலட்சுமணன்; துணைச் செயலாளர்:- எஸ். எம். சுல்தான்; பொருளாளர்: எஸ். அகமது; மாவட்ட உறுப்பினர்: இரெ. சாம்பசிவம்; மற்றும் எட்டு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பின்னர், தோழர்கள் திரு. வி. க., என். ஆர். சாமியப்பா, வி. வி. தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தென்திருப்பேரை தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா

23—3—54 இரவு 7-30 மணியளவுக்கு வ. உ சி திடலில் தோழர் டி. கே. எஸ். பன்னீர் செல்வம் வரவேற்புரை வழங்க, தோழர் என். மெய்க்கண்டான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜெஹீந்த் அருணசலம், மு. ச. மணிமொழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தபின் தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

திருச்சி கிளை தி.மு.கழகம்

21-3-54 காலை 10½ மணிக்கு, திருச்சி எடத் தெரு கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் தொ. ப. கோபாலகிருஷ்ணன் செயலாளராகவும், கா. ஜெயராமன் துணைச்செயலாளராகவும், க. பி. ரெங்கசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிளைக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா 2—5—54 தேதிக்குள் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி—வரகனேரி தி. மு. கழகம்

27—3—54 இரவு 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. ஜெகதீசன் தலைமையில் கழக நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எ. சர்பதீன் செயலாளராகவும், டி. பிச்சை துணைச் செயலாளராகவும், என். முருகேசன் பொருளாளராகவும், க. பரிமணம், கே. சுபான், ஆர். கலியபெருமாள், எம். கே. உசேன், வி. கே. முனுசாமி, ஏ. ஜெகதீசன், கா. யாசீன், ஏ பிச்சை, டி. வரிசை ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் 1954ம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

சொற்பயிற்சிக் கூட்டம்

திருச்சி வரகனேரி தாளமுத்து—நடராசன் படிப்பகக் கட்டிடத்தில், 27—3—54 இரவு 8 மணிக்கு தோழர் ஏ. ஜகதீசன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது அவ்வமயம் தோழர்கள் க. பரிமணம், என். முருகேசன், எம். ஏ சர்பதீன், வி. கே. முனுசாமி, ஞா. ரஞ்சிதன், என். அருணசலம் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.

விருத்தாசலம் தி. மு. கழகம்

21—3—54ல், கழகக் கமிட்டி கூட்டம் அல்லாக் கோயிலில் நடைபெற்றது. அதுசமயம், செயலாளராக எஸ். எம் இப்ராகிம், துணைச் செயலாளராக வி. எஸ். மணி, பொருளாளராக ஜி. ராமு, விளம்பர உறுப்பினராக கே. சுப்ரமணியம், ஒன்பது பேர் கமிட்டி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாப்பநாயக்கன் புதூர் தி. மு. கழகம்

25—3—54ல், தோழர் கூத்தரசன் தலைமையில், கிளைக் கழக இல்லத்தில், உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, பொருளாளராக தோழர் பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன

நாகை தி. மு. கழகம்

23—3—54 இரவு 9-45 மணிக்கு கழகக் கட்டிடத்தில், செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பொதுப் பிரச்னைகள் பல ஆராயப்பட்டன. தஞ்சை மாவட்ட தி. மு. க. இரண்டாவது மாநாட்டிற்கு வேண்டிய உதவி நல்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர், தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி, அருப்புக்கோட்டை முத்து, என். ஆர். சாமியப்பா ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள்: என். மக்ரிசாமி, டி. கோவிந்தராஜ் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வளவனூர் தி. மு. க. (கிளை)

28—3—54 இரவு 7 மணிக்கு செயலாளர் கா. காமதேவன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, ஏப்ரல் 25-ந் தேதியன்று கழக முதலாண்டு விழாவும், "தூத்துக்குடி நிதி" உதவிக்காக ரூ. 101 கொடுப்பதெனவும் தீர்மானித்து, ரூ 100 பொதுப்பணம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது; மீதி ரூ. 1 ஆண்டு விழாவின்போது அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி தமிழிசை மன்றம்

மறுமலர்ச்சி நாடகம்

★

தூத்துக்குடி, மார்ச் 19—

"சமுதாய முன்புதர்களைக் களைந்தெறியா நிலையில் இளமை உலகு 'காதல்' பூந்தோட்டத்தில் காலடி எடுத்து வைப்பதில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும்,"

என்ற உண்மையைப் பிரதிபலிக்கும் வண்ணமாகத் திரைப்பட வசன கர்த்தா தோழர் விருதை ந. இராமசாமி உருவாக்கிய "நீல வானிலே.... ?" எனும் சமூக மறுமலர்ச்சி நாடகத்தைத் தங்களது வளர்வின் வழிக்கு உதவும் நிதிபெறத் தூத்துக்குடி தமிழிசை மன்றத்தினர் அக்கர் பாலகிருஷ்ணா அரங்க மேடையில் நடித்தனர்.

மன்றத்தின் செயலாளர் திரு. ஏ. அய்யாச்சாமி பாவலரையும் வரவேற்றுப் பேசினார். தலைமை வகித்த திரு. ஏ. வி. அருணசலம் நாடகப்பணி சிறக்க இதுபோன்ற முயற்சிகள் பெருகவேண்டுமென்றார். புதுமையான கோணத்தில் நாடகத்தை அமைத்துள்ள நாடகாசிரியருக்கு நல்லதோர் வருங்காலம் உண்டென்ற உறுதியுடன் வாழ்த்தினார்.

"கண்மூடி வழக்கத்திற்குக் காவு கேட்கும் பெரியவர் கூட்டமே!.... இதோ... 'தாமரையின் பிணத்தையும் காணிக்கையாக ஏற்றுக் கர்ஜனை செய்—உன் பசி தீரும் மட்டும் புசி"

இவ்வாறு அடிஅடித்துப்பேசிக் குமுறிய மனோகரின் நடிப்பு இன்றைய சமுதாயத் தலைவர்களுக்குச் சவால் விடுவதாக மிளிர்ந்தது.

பகுத்தறிவு நிகழ்ச்சி!

★

சேலம் மாவட்டம், பாலப்பட்டியில், 'அழகிரி திடலில்' தி. மு. கழகச் சார்பில் தோழர் செ. ரா. சங்கரன் தலைமையில் ஓர் பகுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி, தி. மு க. தோழர் ஜி. அப்பாசாமி அவர்கள், "மந்திரமா?... தந்திரமா?" என்ற தந்திர நிகழ்ச்சிகள் சுமார் முப்பதுக்கும் மேற்பட்டவைகளை செய்துகாட்டி, 'இவைகள் மந்திரம் அல்ல — தந்திரம்தான்,' என விளக்கமும் தந்தார்.

பிரிவுபசாரம்

★

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம் பம்பாய் கிளையின் சார்பில், தாயகம் செல்லும் தோழர்கள் ஏ. எல். பெருமாள், சி. சிவகுருநாதன் ஆகியவர்களுக்கு 20-3-54 மாலை 7 மணிக்கு வாலைமுக்கட்டவாடி, குடியரசு நிலையத்தில் பிரிவுபசாரக் கூட்டம் ம. ப. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

இலங்கை தி. மு. கழக பொரல்லக் கிளை

20—3—54 இரவு 9 மணியளவில் கிளை பணி மனையில் தோழர் டி. எம். பீர்முகமது தலைமையில் நிர்வாகத் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்:— ஞா. சி. அன்பழகன்; துணைச் செயலாளர்:— என். எஸ். தம்பித்துரை; பொருளாளர்:— கே. பி. முத்தையா; நிர்வாகிகள்: கே. எஸ். முத்துநாயகம், எம். குருஸ், இ. செல்லையா, எஸ். பொன்னையா, எஸ். பி. கதிரேசன், எம். வெள்ளைச்சாமி, எம். சுந்தராசு, பி. வேலு, எ. நாகேன் ஆர். சுப்பிரமணியம், பி. கே. சோமநாதன், எம். எஸ். அருள்

மத்திய செயற்குழுவிற்கு இரு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'சாய்ந்த' தராசும், தேய்ந்த படிக் கற்களும் மாறட்டும்'

'ஆள் மாறினால் மட்டும் போதாது— அடிப்படையும் அகல வேண்டும்'

தி. மு. கழகத் துவக்க விழாவில் தோழர்கள் பேச்சு

மதகுசாலை, மார்ச் 30—

28—3—54ல், தி மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் ம. கொ. மணி தலைமை தாங்க தோழர் தர்மு பேசினார்.

பிறகு தோழர் ஒளி பேசிய போது, "வயோதிகர்கள், வாலிபர்களின் காதல் திருமணத்திற்கு ஆதரவு தராவிட்டாலும், ஜாதி ஒழிக்கும் பணியிலேயாவது ஒதுங்கியாவது நிற்கட்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர், தோழர் தில்லைவில்லாளன், "தி. மு. கழகத்தின் கொள்கை நாஸ்திகம் இல்லை என்றும், அனைவரையும் ஆட்டிவைக்கும் ஆண்டவனுக்கு அலிகார் பூட்டு போடுகிறார்களே, அவர்கள்தான் நாஸ்திக வாதிகள்," என்றும் கூறினார்.

மந்திரி சபையிலே மாற்றம் ஏற்படுவதுபற்றி அவர் குறிப்பிடும்போது, "மளிகைக் கடையிலே செட்டியார் உட்கார்ந்து வியாபாரம் செய்தாலும் சரி, அவருக்குப் பதில் அவர் குமாஸ்தா வியாபாரம் செய்தாலும் சரி, கடையிலே உள்ள சாய்ந்த தராசும், தேய்ந்த படிக்கற்களும் மாற வேண்டும்; அது போல, மந்திரி சபையிலே ஆள் மாறினால் போதாது — அடிப்படையே மாறவேண்டும்" என்று கூறி முடித்தார்.

நான்குனேரி வட்டார ஆதிதிராவிட சங்கம்

ஆண்டு நிறைவு விழா

பம்பாய், மார்ச் 30—

20—3—54 பிற்பகல் தோழர் ஏ எஸ் எஸ். மந்திரம் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் உ அ. செல்லையா ஆண்டு அறிக்கை வாசித்தார். தோழர்கள் ச. சி மகாராசன், வி எம். கணபதி பேசிய பின், ஏஸ். மாசனம் தலைவராகவும், ஏ. டி. அருணசலம் துணைத் தலைவராகவும், என். எம் கிருஷ்ணன் செயலாளராகவும், கீ எஸ். அப்பாதுரை, பி. பரமானந்தம் துணைச் செயலாளராகவும், வி எம். கணபதி பொருளாளராகவும் பலர் நிர்வாகக் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தோழர்கள் ராமலிங்கம், ராஜையா தலைமையில் தொண்டர் படை அமைக்கப்பட்டது.

தொழிலாளர் ஐக்கிய கலை மன்றம்

சமனசமுத்திரம், மார்ச் 29—

28—3—54ல், தோழர் இரா. மா. பொன்னுசாமி இல்லத்தில், மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது செயலாளராகவும். பொருள் உறுப்பினராகவும் தோழர் இரா. மா. பொன்னுசாமியும், துணைச் செயலாளராக சு. மா. இளமுருகுவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

கோத்தகிரி (நீலகிரி) மாணவர் மன்றம்

20—3—54 பகல் 2 மணிக்கு தோழர் கிருட்டிணன் தலைமையில் 'மாணவர் மன்றம்' ஆரம்பிக்கப்பட்டது. தோழர்கள் கிருஷ்ணன் தலைவராகவும், இரியன் செயலாளராகவும், முத்தலிப் துணைச் செயலாளராகவும், பெள்ளன் பொருளாளராகவும், மற்றும் ஐவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயற்கை மழை

இந்தியருக்குப் பயிற்சி

புதுடில்லி, மார்ச் 30—

செயற்கை மழை பெய்விப்பதில் பயிற்சிபெற இரு இந்திய விஞ்ஞான அதிகாரிகள் ஆஸ்திரேலியா செல்லவிருக்கின்றனர்.

நீர்ப்பழனி கிராம நல உரிமைச் சங்கம்

திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பகுதி நீர்ப்பழனியில் 20—3—54 மாலை 7 மணி அளவில் தோழர் ஆர். சீனிவாசன் தலைமையில் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் ம. அய்யாசாமி சேர்வை, அழகு, ஆர். சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சங்கத்திற்கு தோழர்கள் எம். பிச்சைக்காரன் பிலியனூர் தலைவராகவும், எஸ். பி. சத்தியசாமி துணைத் தலைவராகவும், ஆர் சீனிவாசன் காரியதரிசியாகவும் மற்றும் 13 பேர் அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணங்கள்

தொட்டம்பாளையம், மார்ச் 24—

17—3—54 காலை 9 மணியளவில் புதூர் தி. மு. கழகச் செயலாளர் சி. நடராசனுக்கும், தொட்டம்பாளையம் தோழியர் சரோஜினிக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிக்கப்பட்டது—வாழ்பெற்றோம்-நன்றியுடையது-பொதுப்பாளர்.

* * *

15—3—54-ல் முத்துப்பேட்டையில் தோழர் நமகோடி — தோழியர் மனோன்மணி திருமணம் தோழர் டி வி. டேவிஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந. தருமலிங்கம், டாக்டர் டி. என். சிவசங்கரன் ஆகியோர் திருமணம் என்பது பற்றி பேசினர். இதன் நினைவாக ரூ. 2 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொதுப்பாளர்

⁂ ⁂ ⁂

25—3—54-ல் முத்துப்பேட்டையில் தோழர் தில்லைக்கண்ணு—தோழியர் சரோஜா திருமணம் நடைபெற்றது. தோழர் ந. தருமலிங்கம் தலைமையில், தோழர்கள் ப. காலசாமி, இரா. நடராசன் ஆகியோர் பேசினர்.

பெயர் மாற்றம்

கடலூர் ஓ. டி. மார்ச் 28—

கடலூர் நகர தி மு. கழகத் தோழர் வி. சண்முகம் அவர்கள் பெயர் மாற்று விழா 25—3—54 மாலை 3 மணிக்கு அண்ணா அன்பு நிலையத்தில் தோழர் எஸ். மாரிமுத்து தலைமையில் நடைபெற்றபோது, "செம்மொறன்" என்று அழைக்குமாறு தோழர் அஜீஸ் கேட்டுக்கொண்டார்.

மறைவு

திருவாரூர் இசை வேளாளர் சங்கத் தலைவரும் ஜமீன்கரை நாதசுவர வித்வான் கே. எஸ். பிச்சையப்பா அவர்கள் மாமனுருமாகிய, நாதசுரம் வி. நாராயணசாமி அவர்கள் 23—3—54 இரவு 9 மணிக்கு திருவாரூரில் காலமானார்; 24—3—54 அன்று சவ அடக்கம் நடைபெற்றது.

தமிழ் மொழியின் மீது ஆந்திர சர்க்காரின் சீற்றம்

—(:)—

சித்தூர் தமிழ்ப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் உடனடியாக இணைப்பதே பரிகாரம்

திருத்தணி, மார்ச் 31—

"திருத்தணி தாலுக்கா பெரும்பான்மை தமிழ்ப் பகுதிகள்; அங்கே மக்கள் தொகையில் 60 சதவிகிதத்தினர் தமிழர்கள்; சித்தூர் மாவட்டம், எந்த மாநிலத்தைச் சேர்ந்த பகுதி என்பதை இன்னும் கூறுவதற்கில்லை; மொழிவாரி எல்லைக் குழுவை எதிர்பார்த்திருக்கிறது; அம்மையார் குப்பம் சர்ச்சைக்கு இடமளித்திருக்கும் பகுதி; அநேகமாக வியாபாரமெல்லாம் சென்னையுடன்தான் நடைபெறுகிறது; கடிதப் போக்குவரத்து, கணக்கு வழக்கு எல்லாம் தமிழிலேயே நடக்கின்றன; ஆனால், மக்களுக்குப் புரியாத மொழியில் கணக்குகளை எழுத வேண்டுமென்று உத்திரவிடுதல், இந்திய அரசியல் சட்டப்படி குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பது போலிருக்கிறது; எனவே, உடனடியாகத் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்க உத்திரவளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்,"

—என்று, திருத்தணி தாலுக்காவில், தமிழில் கணக்குகள் எழுதக் கூடாதென்றும், அவ்வாறு எழுதினால் தண்டிக்கப்படுவார்கள் என்றும், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் ஏதாவதொன்றிலேயே எழுதப்பட வேண்டுமென்றும், திருத்தணி டெபுடி வர்த்தக அதிகாரி உத்திரவிட்டுள்ளதை எதிர்த்து, பிரதம மந்திரி, மத்திய நிதி மந்திரி, சென்னை—ஆந்திர முதல் மந்திரிகள், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டிருக்கும் விண்ணப்பத்தில், இவ்வூர் தமிழ் வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆட்சேபித்திருக்கும் வர்த்தகர்கள், அம்மையார் குப்பத்தைச் சேர்ந்தவர்கள்.

"1954 ஏப்ரல் முதல் ஆந்திர மாநிலத்தின் மொழியான தெலுங்கிலோ, அல்லது இந்தியிலோ, அல்லது ஆங்கிலத்திலோ கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், தவறி நடந்தால் தண்டனை கிடைக்குமென்றும் திருத்தணி, புத்தூர், காளஹஸ்தி தாலுகாவிலுள்ள வர்த்தகர்களுக்கு விற்பனை வரி அதிகாரிகளால் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான வர்த்தகர்கள் மாண்டார்வீவர்கள்; அவர்களுக்கு தெலுங்கு எழுதப்படிக்கத் தெரியாது," என்று அவ்விண்ணப்பத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

* * *

தமிழ்ப் பாட்டு கேட்க வசதி மறுப்பு?

ரேடியோ இஞ்சினீயரின் செய்கை இது!

திருத்தணி, மார்ச் 31—

திருத்தணி தாலுகா, அம்மவாரி குப்பம் பஞ்சாயத்து போர்டு தலைவர் அறிவிப்பதாவது:—

"திருத்தணி தாலுகாவில் திருச்சி நிலையத்திலிருந்து தமிழ் பாட்டுகளைக் கேட்கக் கூடிய பொது ரேடியோ செட் ஒன்று இருக்கிறது; இம்மாதம் கர்னூல் ரேடியோ இஞ்சினீயர் மேற்படி ரேடியோ நிலையத்திற்கு வந்து அதை ('மதராஸ்—பி') தெலுங்கு பாட்டுகள் கேட்கக்கூடியதாக மாற்றினார்; இந்த ரேடியோ செட் மூலம் பாட்டு கேட்கக் கூடியவர்கள் பெரும்பாலோர் தமிழர்கள்; இதை அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்; தமிழ்ப் பாட்டுக்கு திருச்சி அஞ்சல் நிலையமாக ரேடியோ செட்டை மாற்றினாலொழிய பஞ்சாயத்து போர்டுக்கு வரி கொடுக்க முடியாதென்று இவ்வூர் மக்கள் அறிவித்துள்ளனர்; சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினேன்; பொது ரேடியோ நிறுத்தப்பட்டுவிட்டது.

—(ச. மி)

வெள்ளியத் தகடு விலை குறைவு

புதுடில்லி, ஏப். 1—

இன்று முதல் வெள்ளியத் தகடு (டின் பிளேட்) விற்பனை விலையை டன்னுக்கு ரூ 50 வீதம் குறைக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். சமீப மாதங்களில் வெள்ளிய விலையைக் குறைத்ததால் விலை குறைப்பு சாத்தியமாயிற்று.

ஆசாத் பாகிஸ்தான் கட்சி கூட்டத்தில் குழப்பம்

போலீஸ் தடியடியால் பத்து பேருக்கு காயம்

கராச்சி, மார்ச் 31—

இங்கு, நேற்று மாலை, ஆசாத் பாகிஸ்தான் கட்சியின் தலைவரான மியான் இப்திகாருதீன் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார். கூட்டத்தில் பலத்த குழப்பம் ஏற்பட்டதின் பயனாக, போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்து குழப்பத்தை அடக்க வேண்டியதாயிற்று.

தடியடியின் காரணமாக சுமார் 10 பேருக்கு காயம் ஏற்பட்டது. கூட்டத்தில் கலகம் விளைவித்தவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட நால்வரை போலீசார், போலீஸ் நிலையத்தில் வைத்திருந்து, பின்னர் இரவில் விடுதலை செய்து விட்டனர்.

கழகக் கூட்டம்

★

சென்னை

தி. மு. கழக 3-ம் ஆண்டு நிறைவு விழா

3—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: பன்னீர்செல்வம் திடல் (சுறீம் பீடி பெக்டரி எதிரில்)

தலைவர்: தே. நா. புருஷோத்தமன் (ஆண்டகை)

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

என். வி. நடராசன்

சி. ஆர். பாலசுந்தரம்

இளம்பரிதி

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

2—4—54 மாலை 6 மணிக்கு ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில் தோழர் க. அன்பழகன் "மொழியும் மக்களும்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார். தோழர் மா. இளஞ்செழியன் தலைமை வகிப்பார்.

எழும்பூர் (52-வது வட்ட) தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம்

3—4—54 சனிக்கிழமை இரவு 9-மணிக்கு, மணி வீற்றுத் தொட்டியில் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் இதனையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி செயலாளர் டி. என். சரவணன் கேட்டுக் கொள்கிறார்.

எண்ணூர் தி.மு.கழக உறுப்பினர்கட்கு

"3-4-54 மாலை 6 மணிக்கு செயற் குழுக் கூட்டம் கழக கொட்டகையில் நடைபெறும். அதுசமயம் கழகத்திற்கென கட்டியுள்ள கொட்டகை திறப்பு விழா நடத்துவது பற்றியும், புதிய உறுப்பினர் சேர்ப்பது பற்றியும் பேச வேண்டியிருப்பதால், எல்லா உறுப்பினர்களும் இதையே அழைப்பாக கொண்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்," என, செயலாளர் வி. சேது அறிவிக்கிறார்.

குடியிருப்பு சீட்டைப் புதுப்பிக்க மறுப்பதற்கு வர்த்தக சபை எதிர்ப்பு!

—:O:—

சர்க்கார் உத்திரவு செல்லாதென சிலோன் நீதிமன்றத்தில் வழக்காட யோசனை!

கொழும்பு, மார்ச் 31—

சிலோனில் உள்ள இந்தியர்களுக்கு, சர்க்கார் தற்காலிகக் குடியிருப்பு சீட்டு வழங்கி வந்தது. அவைகளை, இனி புதுப்பிப்பதில்லை என சர்க்கார் முடிவுக்கு வந்துவிட்டது. அம்முடிவு, குடியிருப்பு சீட்டு வழங்குவதற்கான சட்ட விதிகளுக்கு முரண்பாடு உடையது என, இந்திய வர்த்தக சங்கம் சிலோன் முதல் மந்திரிக்கு எழுதியுள்ளது.

அதுவுமல்லாமல், சர்க்கார் செய்துள்ள முடிவை எதிர்த்து, சிலோன் சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடவும் அங்குள்ள இந்திய வர்த்தக சபை ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

கும்பமேளாவில் தீண்டாமைப் பிரசாரம்!

—:O:—

ரூ 16,557 செலவாம்!

புதுடில்லி, மார்ச் 29—

கும்பமேளாவின்போது தீண்டாமையை எதிர்த்துத் தீவிரமாகவும், விரிவாகவும் பிரசாரம் நடத்தப்பட்டதாகவும், ஜனவரி மாதம் 14-ந் தேதி முதல் பிப்ரவரி 17-ந் தேதிவரை நடந்த இப்பிரசாரத்துக்காக ரூ 16,557 செலவாயிற்றென்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

வேட்டி புடவை உற்பத்தி

கைத்தறிக்கு ஒதுக்குமாறு பீகார் வற்புறுத்துகிறது

பாட்னா மார்ச் 31—

வேட்டி, புடவை உற்பத்தியை (எவ்வளவு நம்பர் நூலாயினும்) கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும்; 40-ம் அதற்கு குறைவான நம்பருள்ள துணி உற்பத்தியையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும்—என்று மத்திய சர்க்காரை வற்புறுத்தும் தீர்மானம் பீகார் அசெம்பிளியில் நிறைவேறியது.

மே. பஞ்சாப் முஸ்லீம் லீகில் பிளவு?

லாகூர், மார்ச் 30—

மேற்கு பஞ்சாப் முஸ்லீம் லீகில் பிளவு ஏற்பட்டுவிட்டது. மாநில முஸ்லீம் லீக் தலைவரும் மேற்கு பஞ்சாப் முதல் மந்திரியுமான பெரோஸ்கான் நூன் ஏப்ரல் 4ந் தேதி முஸ்லீம் லீகர்களின் மாநில மாநாடு கூட்டுகிறார்; அதேசமயம் இப்போதைய முதல் மந்திரி தௌலதானாவும் லீகர்களின் இன்னொரு மாநாட்டைக் கூட்டுகிறார்.

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமையும், கிழக்கு வங்கத் தேர்தலில் லீகிற்கு ஏற்பட்ட தோல்வி பற்றியும் விவாதிக்கவே இம்மாநாடுகள் கூடுகின்றன.

வாணியம்பாடி ஜவுளி வியாபாரிகள் சங்க முடிவு

30—3—54ல் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் ரூபாய் 1-க்கு மேற்கொண்டு பதினாறு 15 தம்படி விற்பனை வரியை அரசாங்கம் விதித்திருப்பதை கண்டிக்க ஏப்ரல் 2, 3-ந் தேதிகளில் வாணியம்பாடி ஜவுளிக் கடைகளை மூடி பூர்ண ஹர்த்தால் செய்வது என்பதாக முடிவு செய்யப்பட்டது.

தொழில் கல்லூரிகளில் பெண்கள் எண்ணிக்கை

சென்னை சர்வ கலாசாலை செனட் கூட்டத்தில் வெளியிடப்பட்ட தகவலின்படி பல்வேறு தொழிற் கல்லூரிகளில் படிக்கும் பெண்களின் எண்ணிக்கை வருமாறு:—

சட்டம் 25; வைத்தியம் 546; ஆசிரியர் தொழில் 259; நர்ஸிங் தொழில் 55; கால்நடை வைத்தியம் 4; விவசாயம் 5; தொழில் நுட்பம் 1.

முன்னாள் மந்திரி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சொல்லப்படுகிறது.

இங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள நந்திகோட்கூர் எனும் இடத்தில், பொதுவுடமைக் கட்சியின் முக்கியஸ்தரான அனுமந்தராவும், மற்ற இருவரும் ஏற்கனவே தாக்கப்பட்டுள்ளனர் என அறியக் கிடக்கிறது.

ஆட்சிப் பொறுப்..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ருக்கு விளக்கிவையுங்கள்.

அரசியல் உணர்ச்சிகள், தேசிய கௌரவம், பூகோள ரீதியான உண்மை, பொருளாதார ரீதியான பிரத்தியக்ஷ விஷயங்கள் ஆகியவை எல்லாம் உங்களைத் திருப்திப்படுத்துவதற்குப் போதுமான உண்மைகளென்று நீங்கள் ஒரு வேளை கருதாமலிருக்கலாம்; அல்லது, ஒருக்கால் உங்களுக்கு இன்னும் அதிக உண்மைகள் தேவையாக இருக்கலாம்; அப்படியானால், இப்போதுகூட நீங்கள் என்னுடனும், என் சகாக்களுடனும் எந்த இடத்திலாவது சந்தித்துப் பேசலாம்; ஆனால், அந்த இடம் எங்களுக்கு ஆபத்து ஏற்படாது என்று நிச்சயமாய் உத்திரவாதமுள்ள இடமாக இருக்க வேண்டும்.

உங்களை அகால வேளைகளில் பல்வேறு உள்பகுதிப் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்வதாகக் கேள்விப்படுகிறோம்; அங்கே எவ்வளவு அமைதி நிலவுகிறது என்பது உங்களுக்குக் காட்டப்படுவதாகவும், அதனால் அங்குள்ள மக்கள் பிரெஞ்சு ஆட்சியை ஆதரிக்கிறது புலப்படுமென்று உங்களுக்குத் தெரிவிக்கப்படுவதாகவும் கேள்விப்படுகிறோம்.

"நீங்களும், உங்கள் கமிஷனரும், இன்னும் சற்று அதிக உண்மையுடனும், தைரியத்துடனும் நடப்பவராயிருந்தால், இந்த உள்பகுதிப் பிரதேசங்களை நீங்கள் தாண்டிச் செல்வதற்குச் சிறிது முன்னதாக எங்களுக்குத் தகவல் தெரிவியுங்கள்; நிலைமை முற்றிலும் வேறு வகையாக இருப்பதை உங்களுக்குக் காட்டுகிறோம். ஆனால், அப்படி நடந்தால், உங்களுக்குப் பிடிக்காத, இடைஞ்சலான உண்மைகளை நீங்கள் காண நேரலாம்."

ஓரே குண்டினால் ஒரு பெரிய நகரத்தை அழிக்க முடியுமாம்!

—O—

மிருகப் பலத்தைக் கையாளுபவர்களுக்கு விநோபாபாவே எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச் 31—

"உலகத்திலுள்ள எந்த ஒரு நகரத்தை வேண்டுமானாலும், ஒரே குண்டால் அழித்துவிட முடியும்; சமீபத்தில் வெடித்துப் பரிசோதித்த ஹைட்ரஜன் குண்டு இதை நிரூபித்துவிட்டது; அந்தக் குண்டின் சக்தியை நமது தேவைக்குத் தக்க முறையில் விரிவுபடுத்திக் கொள்ள முடியும்,"

என்று, அமெரிக்க அணுசக்தி குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

★

"பலாத்காரத்தைச் செய்பவனுக்குத் தன்னடக்கம் இருக்காது; நல்லது எது, கெட்டது எது என்ற பகுபாடு தெரியாது; மிருகத்தனமான பலத்தைக் கொண்டு சமூகத்தை மாற்றவோ, ஒழுங்கை நிலைநாட்டவோ முடியாது என்பதற்கு உலகச் சரித்திரத்தில் உதாரணங்கள் பல உள்ளன; மிருகத் தனமான பலத்தைக் கொண்டு, கல்லாவற்றையும் சாதித்துக்கொள்ள முடியும் என்று வெளித் தோற்றத்தைக் கொண்டு நினைக்கிறவர்கள், இறுதியில் ஏமாந்து தான் போவார்கள்,"

என்று, பிரார்த்தனைக் கூட்டமொன்றில், ஹைட்ரஜன் குண்டு பரீட்சையைக் குறிப்பிட்டுப் பேசுகையில், ஆச்சாரிய விநோபாபாவே குறிப்பிட்டார்.

நிறத் திமிரின் வெறியாட்டம்!

பிரிட்டோரியா, (தெ. ஆப்)

மார்ச் 31—

இங்குள்ள ஆஸ்பத்திரியில் நோயாளிகளைக் கவனிக்கவும், பரிசோதிக்கவும் இந்திய டாக்டர் ஒருவர் அனுமதி கோரியிருந்தார், ஆஸ்பத்திரி போர்டு இதற்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டது.

நோயாளிகளைக் கவனித்து வரும் வெள்ளை நர்சுகளுக்கு கருப்பு டாக்டர் கட்டளையிடுவது சரியல்ல என்று போர்டு கருதி அனுமதி மறுக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: [illegible] அண்ணாத்துரை, எம். ஏ.